DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.98/2023**
Deposition of Witness for – Prosecution : DW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதிகா | | : |
| க/பெ | : சேகர் | மதம் | : |
| கிராமம் | : புதூர் | தொழில் | : OCF |
| வட்டம் | : அம்பத்தூர் | வயது | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 15.04.2026**

**<u>முதல் விசாரணை</u>: DW1**

நான் இவ்வழக்கின் எதிரி ஆவேன். நான் புகார்தாரரிடம் இருந்து எந்த பணமும் வாங்கவில்லை. புகார்தாரர் என் தம்பி திருமணத்திற்கு பணம் வாங்கியதாக பொய்யான சங்கதிகள் கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு நான் பணம் எதுவும் வாங்கவில்லை காசோலை திருப்பப்பட்ட குறுஞ்செய்தி கிடைத்த உடன் தான் எனது காசோலையை தவறாக பயன்படுத்திய தகவல் தெரிய வந்தது. என் தம்பி திருமணம் டிசம்பர் மாதம் நடந்ததாகவும், அதற்காக தான் நான் பணம் கேட்டதாக புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது ஆனால் என் தம்பியின் திருமணம் ஆகஸ்ட் மாதமே நடந்து முடிந்து விட்டது அதற்கான திருமண அழைப்பிதழ் **(எ.ம.சா.ஆ.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காசோலை கொடுத்ததாக புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் நான் உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்ததற்காக மருத்துவ அறிக்கை **(எ.ம.சா.ஆ.2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நானும் என் கணவரும் சேர்ந்து தான் வழக்கு காசோலையை புகார்தாரரிடம் கொடுத்ததாக புகார் மனு மற்றும் ம.சா.1 சாட்யத்தில் தெரிவித்திருந்தார்

அந்த காலகட்டத்தில் என் கணவர் உயிருடன் இல்லை, 24.10.2022 ல் என் கணவர் இறந்துவிட்டார் அதை உறுதி செய்ய என் கணவரின் இறப்பு சான்றிதழ் **(எ.ம.சா.ஆ.3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார்தாரர் என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் இவ்வழக்கு காசோலையானது எனது நாத்தனாரிடம் என் கணவர் எனது காசோலையும் அவரது காசோலையும் Tingering and painting work shop நடத்தி வந்ததற்கு Rotation க்காக கொடுத்து வைத்திருந்தார். என் நாத்தனார் என் மீதும் என் கணவர் மீதும் அம்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது. அந்த வழக்கும் என் கணவர் பணம் வாங்கி தரவில்லை என்றும் என் சொந்த வீட்டின் மேலும் போடப்பட்ட வழக்காகும். நாத்தனாரிடம் வியாபாரத்திற்காக கொடுத்த வைத்த காசோலை தான் தவறாக பயன்படுத்தியுள்ளார்கள். என் நாத்தனாரும் புகார்தாரரும் உறவினர் ஆவார்கள். எங்களை பழி வாங்கவேண்டி எனது சொந்தமான காசோலையை புகார்தாரரிடம் கொடுத்து தவறாக பயன்படுத்தி இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் புகார்தாரரிடம் எந்த ஒரு கடனும் வாங்கவில்லை அவரிடம் காசோலையும் தரவில்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K